**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 59/2021

**எ. ம.சா1 செண்பகம்**

| | |
|---|---|
| Name | : **செண்பகம்** |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 8.1.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல்

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர். நான் என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் சரியானது தான். அதிலுள்ளது எனது கையெழுத்து தான்.

(நிரூபண வாக்குமூலம் தாக்கல். ஆவணங்கள் தாக்கல் இல்லை)

3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தில் ஈடுபட்ட டி.என்.76.டி.7362 பிக்கப்வேன் விபத்து சமயம் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் எனது வாகனம் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். விபத்திற்கு பிறகு நான் 3ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிறுவனத்திற்கு விபத்தை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக எனது ஒட்டுனர் சுப்பிரமணியன்

மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையை எதிர்த்து எந்தவிதமான நடவடிக்கையும் நானோ, எனது ஒட்டுனரோ எடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் எனது வாகனத்தை ஒட்ட 1ம் எதிர்மனுதாருக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். ஒட்டுனர் உரிமம் இல்லாத நபரை வாகனத்தை இயக்க அனுமதித்தால் காப்பீடு விதிமுறைகளை நான் மீறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு மோட்டார் வாகன ஆய்வாளர் எனது வாகனத்தை சோதனையிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்பட்ட ம.சா.ஆ 7 ஆவணமானது மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் வாகனத்தை இயக்கவில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் நான் வாகனத்தை இயக்கியதாக தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள ஒட்டுனர் உரிமம் எனக்குள்ளது என்றால் சரிதான். காப்பீடு விதிமுறைகளுக்கு எதிராக செயல்பட்டுள்ளதால் நான் தான் மனுதாருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.